*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*18 06 2026 THURSDAY 6 30 PM*
*வணக்கம்-மாநிலச்செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1) நாட்டின் கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் சமுதாய வானொலி சிறப்பான சேவையாற்றி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*2) வெளிப்படையான மற்றும் தூய்மையான அரசு நிர்வாகத்தை த.வெ.க அரசு உறுதி செய்யும் என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் இன்று சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.*

*3) த.வெ.க. அரசு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் குறித்து ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.*

*4) நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த 2 தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*5) Ljubljana சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் வானொலி சேவை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், சுமார் ஆயிரம் சமுதாய வானொலி அலைவரிசைகள் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை ஆகாஷ்வாணி வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், "பொது ஒலிபரப்பு சேவையில் புதுமைகள்" என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டு அவர் பேசினார்.*

*மும்பையில் நடைபெற்ற WAVES மாநாட்டில், சமுதாய வானொலி முக்கியப் பங்காற்றியதாக அவர் கூறினார்.*

*தகவல் பரிமாற்றத்தின் முக்கிய கருவியாக சமுதாய வானொலி திகழ்வதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் 45 செகண்ட்ஸ்)*

*இந்நிகழ்ச்சியில் பேசிய ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ்குமார் ஜெயின், வளர்ந்து வரும் ஊடக சவால்களை எதிர்கொள்ள வானொலி கட்டமைப்பில் புதிய தொழில்நுட்பமும், கண்டுபிடிப்புகளும் கொண்டுவரப்படுவது அவசியம் என்று கூறினார்.*

*"பொது ஒலிபரப்பு சேவையில் புதுமைகள்" என்ற புத்தகத்தில் பத்மஸ்ரீ திரு. ஸ்ரீதரன், வானொலியின் வளர்ச்சிக்கு ஆற்றிய சிறப்பான சேவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சிக்குப் பின், ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் திரு. ராஜீவ்குமார் ஜெயின், சென்னை வானொலி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.*

*தொழில்நுட்ப ரீதியாக வானொலி சேவையின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை அப்போது அவர் வலியுறுத்தினார்.*

*>>>>>><<<<<<*

வெளிப்படையான மற்றும் தூய்மையான அரசு நிர்வாகத்தை த.வெ.க அரசு உறுதி செய்யும் என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தெரிவித்துள்ளார்.

17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உரையாற்றிய அவர், அரசு நிர்வாகத்தை பாதிக்கும் முறையற்ற நிதி பரிமாற்றங்கள், இடைத்தரகர்களின் தலையீடுகள் ஆகியவை முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்று கூறினார்.

மாநிலத்தில் பொது அமைதியை நிலைநாட்டவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை ஒடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ், தமிழகத்திற்கான நிதியை மத்திய அரசு விரைந்து விடுவிக்க வலியுறுத்தப்படும் என்றும் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் கூறினார்.

உச்சநீதிமன்றக் கிளையை சென்னையில் அமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் தமது உரையில் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினை மற்றும் அவர்களிடமிருந்து இலங்கை அரசு கைப்பற்றிய படகுகளை மீட்பது போன்றவற்றிற்கு விரைந்து தீர்வு காண மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகள் எளிமையாக்கப்படும் என்றும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்கும் அவர் தெரிவித்தார்.

ஒசூர், கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை தொடங்குவது குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

த.வெ.க. அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றும் ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தமது உரையில் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேர்தலின் போது த.வெ.க. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது குறித்த எந்தவொரு அறிவிப்பும் ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஆட்சியில் திமுக கொண்டு வந்த திட்டங்கள் தான், ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை சீர்குலைக்கும் வகையில் செயல்படுவதை, திமுக ஒருபோதும் அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசு எடுக்கும் நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு அறிவிப்பும், ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

>>>>>><<<<<<

ஆளுநர் உரையில் புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்பு ஏதும் இடம்பெறவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள் கடன் தள்ளுபடியில் பல்வேறு எதிர்பார்ப்புகள் இருந்த போதிலும், ஆக்கபூர்வமான அறிவிப்பு ஏதுமில்லை என்று கூறினார்.

*வேலையில்லாத பட்டதாரிகளுக்கான உதவித்தொகை, மின்கட்டண கணக்கீடு போன்றவை குறித்து ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*குற்றச் சம்பவங்களை தடுக்க த.வெ.க. அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எவ்வித சமரசமும் இன்றி குற்றச் சம்பவங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, உடனுக்குடன் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.*

*குற்றச் சம்பவங்கள் எதையும் மூடி மறைக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபடவில்லை என்றும் அவர் கூறினார்.*

*தனிப்பட்ட காரணங்களுக்காகவும், சமூக ரீதியாகவும் நடைபெறும் குற்றங்களை தடுப்பதற்கு முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*மின்விநியோகத்தில் ஏற்படும் தடைகளை களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*மின்வாரியத்திற்கு தேவையான உபகரணங்கள் அளிக்கப்பட்டு வருவதாகவும், தேவையான மின்பணியாளர்களை நியமித்து, மின்தடை சரிசெய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மின்சார வாரியம் தொடர்பாக அடுத்த வாரத்தில், தாம் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாகவும் திரு. நிர்மல் குமார் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்க மாநிலத்தை ஆளும் த.வெ.க அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், மாநிலத்தின் பல பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமைகள் மற்றும் கொலைகள் நடைபெறுவது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*இந்த சூழ்நிலையில் முதலமைச்சர் திரு. விஜய், பாலியல் குற்றங்களுக்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்றும், மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 27 மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த 2 தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - 37 செகண்ட்ஸ்)*

*இதனிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மாலை சூறைக்காற்றுடன் பெய்த மழை காரணமாக 20க்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டன.*

*>>>>>><<<<<<*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*தியாகசீலர் கக்கனின் பிறந்த நாளையொட்டி மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு ஆட்சியர் திரு. ஆகாஷ் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*நாமக்கல் வட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களுக்கான ஜமாபந்தி நிகழ்ச்சி, ஆட்சியர் திரு. மதுபாலன் தலைமையில் இன்று நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*நாகையில் சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, பள்ளி மாணவர்கள் சிறப்பு யோகா பயிற்சியை மேற்கொண்டனர்.*

*>>>>>><<<<<<*

*தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் நடத்திய சோதனையில் கணக்கில் வராத ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 800 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.*

*>>>>>><<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*Ljubljana சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்ல் இந்த இணை 5-11, 11-6 11-8, 11-4 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Leo De Nodrest – Lules Rolland இணையை வென்றது.*

*>>>>>><<<<<<*

*இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி-பிரேஸிலின் Marcelo Demoliner இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 7-6 என்ற செட்கணக்கில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஜப்பானின் Takeru Yuzuki இணையை வென்றது.*

*>>>>>><<<<<<*

*துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரணவ் செந்தில்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.*

*>>>>>>END<<<<<<*